மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த ஆணையாளர்கள் தேர்ந் தெடுக்கப்படுவதிலே இரண்டாவது தரமும் அல்லது அதற்கு மேற்பட் தரமும் பதவி உயர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மூன்றாவது முறை யில் வரக்கூடிய நகராட்சிகளுக்கு நேரடியாகவும், மற்றும் பதவி உயர்வு மூலமும் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அப்படி தேர்ந்தெடுக்கப்படும்பொழுது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் உரிய இடம் கொடுத்து தேர்ந்தெடுக்கப்படுகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : 1964-ல் 2,756 எண்ணுள்ள சர்க்காருடைய உத்தரவுப்படி பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிடிகள் இவைகளுக்கு இப்படி விகிதாசாரப்படி தான் கொடுக்கப்படவேண்டும் என்று இருக்கி றது. அதன்படி நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் விவரம் அறிவிக்க முடியும்.

பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள்

*115 வினா—**திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சோ. அழகர்சாமி, திரு எ. பர்லசுப்பிரமணியன், திரு வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில ளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் நலன் களைப் பாதுகாப்பது சம்பந்தமாக பாராளுமன்றம் 1-11-66-ல் இயற்றிய சட்டத்தின் மீது மாநில அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எப் பொழுது எடுக்கப்படும்?

(இ) அச்சட்டத்தை தமிழ் நாட்டில் அமுல் படுத்த உத்தேசம் உண்டா?

(உ) ஆம் என்றால் எப்பொழுது அறிவிப்பு வெளியிடப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) முதல் (உ) வரை இந்திய அரசினால் இயறறப்பட்ட 1966-ம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின்படிக்கான விதிகளை மாநில அரசு இறுதி யாக இயற்றினால்தான், மேற்படி சட்டத்தின் விதித்துறைகளைச் செய லுக்குக் கொண்டு வருவது இயலும். இச்சட்டத்தின்கீழ் வகுக்கக்கூடிய மாதிரி வரைவு விதிகளை இந்திய அரசு வகுத்து வருகிறது. மேற்படி சட்டத்தின்கீழ் மாநில அரசுகள் விதிகளை இயற்றுவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு மேற்படி வரைவு விதிகள் அவற்றிற்கு அனுப் பப்படும். அந்த மாதிரி வரைவு விதிகள் கிடைத்தவுடன், மேற்படி சட்டத் தின்கீழ் விதிகள் இயற்றுவதற்கும் அச்சட்டத்தை இம்மாநிலத்தில் செயல் படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : நடைமுறையில் அமலில் இருக்கக்கூடிய இந்தச் சட்டம் பீடி சுருட்டு தொழிலாளர்களுக்கு சாதகமாக அமைய வில்லை. ஆகவே, அவர்களுக்குக் பயன் அளிக்கக்கூடிய முறையில் விரை வில் இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது மாநில அரசாங்கத்தினுள்ள வேறு ஒரு சட்டம். இங்கே கேள்வியில் இருப்பது மத்திய சர்க்கார் சட்டத்தைப்பற்றியது. மத்திய சர்க்கார் எல்லா மாநிலங்களுக்கும் பயன் படும்படியாக ஒரு புதிய சட்டத் தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை நம்முடைய மாநிலத்திலே வெகு விரைவிலே அமல்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய் சர்க்கார் வகுத்திருக்கக் கூடிய இந்தச் சட்டத்தை மாநில சர்க்கார் திருத்துவதற்கு அதிகாரம் உண்டு என்றாலும், அப்படி திருத்தக்கூடிய நேரத்தில் மத்திய சர்க்கார்

வகுத்திருக்கக்கூடிய அந்த சட்டத்திற்கும் நாம் திருத்துவதற்கும் முரண்பாடுகள் ஏற்படுமேயானால், அரசியல் சட்டத்தின்படி அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மை, அதிகாரம் பிரஸிடெண்டு அவர்களுக்கு உண்டு. ஆகவே, நாம் திருத்தக்கூடிய இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் வற்புறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த மாநிலத்தில் பீடி தொழிலாளர்கள் பற்றி ஏற்கனவே ஒரு சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை அண்டை மாநிலங்களில் இதுபோன்ற சட்டங்கள் இல்லாத காரணத்தினால் ஏற்பட்டது. அதற்குப் பின்னாலே மத்திய சர்க்காருக்கு யோசனை தெரிவிக்கப்பட்டு, எல்லா மாநிலங்களுக்கும் "ஒரே மாதிரியான சட்டம் அமலுக்கு வந்தால் இந்தத் தொழில் பாதிக்கப்படாமல் இருக்கும்" என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில்தான் அண்மையிலே மத்திய சர்க்கார் இந்த சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். இந்த சட்டம் அமலுக்கு வந்து அதை நாம் அமல்படுத்தி, அதிலே குறை தென்பட்டால், அதற்குப் பின்னாலே பார்த்துக் கொள்ளலாம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : 1958-ம் வருஷம் பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அந்த சட்டத்திற்கு உண்டான ரூல்ஸ் மற்றவைகளெல்லாம் நல்ல முறையில் அமைந்திருக்கின்றன. ஆகவே, இந்திய அரசு சட்டத்திற்கு ரூல்ஸ் தயார் செய்து வரவேண்டுமென்றால், இன்னொரு 4 வருஷம் டிலே ஆகி, வீணாக தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படாமல் போகும். ஆகவே பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமான 1958-ம் ஆண்டு சட்டத்தை சீக்கிரம் அமல் நடத்த சர்க்கார் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இருந்த சட்டம் இங்கே முழுக்க முழுக்க அமல் நடத்தப்படவில்லை. அப்படி அமல் நடத்தினால் ஆந்திர கேரளா, மைசூர், மாநிலங்களில் உள்ள பீடித்தொழிலுக்கும் நம்முடைய நாட்டிலுள்ள பீடித் தொழிலுக்கும் வேறுபாடு இருக்கும் என்று அச்சம் தெரிவித்து, எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டம் இருக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தை மத்திய அரசு இயற்றியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை இங்கே அமல் நடத்தப் பார்த்து பின்னால் ஒரு முடிவுக்கு வரலாம்.

திரு. ஆலடி அருணா : சென்னை மாநிலத்தில் நிறைவேற்றப்பட்ட பீடி பிரெமிஸஸ் ஆக்டின் சில விதிகளிலிருந்து விதிவிலக்கு அளித்ததினால் அந்தச் சட்டம் இப்பொழுது ஒழுங்காக அமல் செய்யப்படாமல் இருக்கிறது. முன்னால் இருந்த அரசு பீடி முதலாளிகளுக்கு சாதகமாக இருக்கவேண்டும் என்பதற்காக அந்த விதிவிலக்கு அளித்தது. இப்பொழுதுள்ள நமது அரசாவது அந்த விதிவிலக்கு இல்லாத வகையில் அந்த சட்டத்தை அமல் நடத்துவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த நோக்கந்தான் இந்த அரசாங்கத்தின் நோக்கமும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய சர்க்கார் இதற்கான விதிவகைகளை வகுத்து எப்பொழுது அனுப்புவார்கள்? நீண்ட நெடுங்காலமாக பீடித் தொழிலாளர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 10 வருஷங்களுக்கு முன்னால் வகுத்திருக்கக்கூடிய இந்த ராஜ்ய சர்க்கார் சட்டத்தையாவது உறுதியாக அமல் நடத்தக்கூடிய அளவுக்கு சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மாநிலத்திலுள்ள சட்டத்தினுடைய அடிப்படையில்தான் இந்த மத்திய அரசின் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. மாநில சட்டத்திலுள்ள பெரும்பாலான பிரிவுகள் இதிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே எவ்வளவு விரைவாக மத்திய சர்க்கார் மாடல் ரூல்ஸை நமக்கு அனுப்புகிறார்களோ

அவ்வளவு விரைவிலே நாமும் இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதாக இருக்கிறோம். அதைப்பற்றி இந்த அரசு மத்திய அரசோடு அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறது.

தமிழக மின் கழகம்

மு.ப. 9–30 * 116 வினா.—திரு. நா. வீராசாமி : மதிப்பிக்குறிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேல்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு மின் கழகத்தில் பொது மக்களின் பிரதிநிதியாக சட்ட மன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரை "Board Member" ஆக சேர்த்துக் கொள்ளும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்திய மின்சாரம் (வழங்குதல்) சட்டம் (1948)-ன் செக்ஷன் 5 (6) பிரிவின்படி தமிழ் நாட்டு மின் கழகத்தில் சட்டமன்ற உறுப்பினரையோ அல்லது பாராளு மன்ற உறுப்பினர்களில் ஒருவரையோ அங்கத்தினராக நியமிக்க இயலாது.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் மின் திட்டத்தில் நம் அரசாங்கத்திற்கும், கேரள அரசாங்கத்திற்கும், நீராறு, பெரவாரிப் பள்ளம் இவைப்பற்றி நேரில் பேச்சுவார்த்தைகள் நடத்தி தீர்வுகாண நம் மாநில மின் துறை தலைவரை கேரளத்திற்கு அனுப்பு வார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அது பற்றி சோனல் கவுன்சிலில் பேசி முடிவு எடுக்கப்பட்டு, இந்த இரண்டு சர்க்கார்களும் தனித்தனியாக அவரவர்களுடைய கோரிக்கைகளை விளக்கி அறிக்கைகள் தயாரிக்கப்படவேண்டும் என்றும், அதன்பிறகு இரண்டு அரசின் அதி காரிகளும், தேவைப்பட்டால் அமைச்சர்களும், பேச்சு நடத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*117 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குறிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத் தில் நடந்து கொண்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் அதற்கான காரணங்கள் யாவை ?.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) மதுரை அலங்கா நல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இந்த ஆண்டில்தான் (1966-67) தற்காலிக உற்பத்தி நடந்தது. அதனால் இந்த ஆலை நஷ்டத்தில் நடக்கிறதா என்பது இப்பொழுது சொல்வதற்கில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ஆலை ஆரம்பித்து சில ஆண்டுகள் ஆகியும், சென்ற ஆண்டு தேர்தல் சமயத்திலே, எலக்‌ஷனுக்காக சில நாட்கள் நடத்திவிட்டு, இன்றைக்கு மூடி இருக்கிறது. அது நடக்காததற்குக் காரணம் என்ன? பல கோடி ரூபாய்கள் மூலதனமாகப் போட்டு, ஆலை நடக்காமல் இருக்கிறது. அதை இனிமேலாவது நடத்த என்ன நட வடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு இந்த ஆலைக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது. ஒரு ஆயிரம் டன் கரும்பு பிழியும் தொழிற்சாலையாக இருக்கும் என்ற நோக்கத்தோடு இது ஆரம்பிக்கப்பட்டது. 23-12-1966-லிருந்து இது பணி